# மனித உரிமைகள் மீட்பு

மாதமிருமுறை இதழ்

உரிமை - 8 மீட்பு - 05 ஜூன் 1 - 15 | 2023 விலை 20 / -




# தமிழகத்தின் வளர்ச்சி எங்களுக்கு மிகவும் முக்கியம்:

## சென்னையில் பிரதமர் மோடி உறுதி

**வா**ழ்க்கை என்பது கடிகாரம் மாதிரிதான். நிற்காமல் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும். கடிகாரம் எப்படி ஓய்வே இல்லாமல் ஓடிக் கொண்டுள்ளதோ அதுபோலத்தான் நாமும் நம் வாழ்க்கையுடன் ஓடிக் கொண்டே இருக்க வேண்டும்

ஓய்வே இல்லாமல் ஓடிக் கொண்டிருந்தால் தான் நம் வாழ்வின் இலக்கை அடைய முடியும். நம்முடைய வளர்ச்சிக்காக ஓடுவதில் தவறில்லை ஆனால் சிறிது நேரம் ரிலாக்ஸ் செய்துக் கொள்ளுங்கள். பிடித்த பாடலோ இசையோ கேளுங்கள். உங்கள் இலக்கை நோக்கிப் பயணியுங்கள். நம் வாழ்க்கையின் எதிர்காலத்திற்காக நாம் ஓடும் ஓட்டம் என்றும் குறையப் போவதே இல்லை.

# காலம் பொன் போன்றது!

உங்களுடைய இலக்குகளை அடைவதற்காக முயற்சி செய்யுங்கள். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார். ஓடாமல் நின்று விட்டால் நம் இலக்கை அடையவே முடியாது. ஓட்டப்பந்தயத்தில் ஓடும் வீரரைப் போல நாமும் நம் வாழ்க்கைப் பயணத்தில் வெற்றி அடையும் வரை ஓட வேண்டும். எதிர்காலத் தேவைகளைக் கருத்தில் கொண்டு சிறப்பாகத் திட்டமிடல் வேண்டும். திட்டமிட்டுச் செயல்பட்டால் இலக்குகளை எளிதில் அடையலாம்.

கடிகாரத்தில் ஓடும் ஒவ்வொரு முள்ளும் நம் வாழ்வில் எடுத்து வைக்கும் ஒரு அடி ஆகும். வேகத்துடனும் விவேகத்துடனும் செயல்பட்டு வெற்றி வாகை சூடுங்கள். நம்மால் முடியாதது எதுவுமில்லை என்று நினைத்து எதிர்கால வாழ்க்கைக்காக திட்டமிட்டு வேகமாக ஓடுங்கள். வேகமாக ஓடுங்கள் உங்கள் வாழ்வை வளர்ச்சிப் பாதையில் இட்டுச் செல்லுங்கள்.

எதையும் ரொம்ப லேசா எடுத்துக்கங்க பாஸ்.. வாழ்க்கை ஓட்டம் என்பதால் அப்படி ஸ்மூத்தாக இருக்க வேண்டும். கடிகாரத்தில் முட்கள் நகர்வதே தெரியாத அளவுக்கு ஓடும் பாருங்க.. அப்படி இருக்க வேண்டும் நமது வாழ்க்கையும்..



# மனித உரிமைகள் மீட்பு

## (மாத இருமுறை இதழ்)

வெளியீட்டாளர்: M. அப்துல்ரகுமான்

உரிமை-8 மீட்பு-05 ஜூன் 1-15 | 2023



**ஆசிரியர்:** நீலகிரி K. மதுசூதனன்.
**இணை ஆசிரியர்:** புதுவை K. ராஜாராம்குமார்.
**தொகுப்பு ஆசிரியர்:** வேலூர் M. ராமச்சந்திரன்.
**சிறப்பு உதவி ஆசிரியர்:** தேனி AR. நாசர்கான்.
**சிறப்பு துணை ஆசிரியர்:** நாகர்கோயில் Dr. S முகம்மது அலி,
**சிறப்பு செய்தி ஆசிரியர்:** வாணியம்பாடி G. வெங்கடேசன்.
**பொறுப்பு ஆசிரியர்:** பெரம்பலூர் M. இளவரசன்.
**தலைமை செய்தி ஆசிரியர்:** நாகர்கோயில் C.J. சுதர்மன்.
**கௌரவ ஆசிரியர்:** கிருஷ்ணகிரி Dr. குமரவேல்.
**தலைமை ஆசிரியர்கள்:** Dr. முகம்மது காசிம், Dr. K. கலைச்செல்வன்.
**முதன்மை ஆசிரியர்கள்:** பரமகுடி S. பதர்னிஷாபேகம், R.M நந்தினி, T. அரவிந்தன், Dr. P. முருகேசன், கேரளா P.K. பிரதிஷ், SGM. ரமேஷ்.

**நிர்வாக ஆசிரியர்கள்:**
Dr M. ஹரிகிருஷ்ணன், M. காதர் முகைதீன்.
**கௌரவ இணை ஆசிரியர்கள்:** R. அகிலேஷ், A. கேம்ராஜ் N. அன்பழகன், A. பிரபாகரன், S.A. சையதுமுகைதீன் ஆலிம், S. லோக சுந்தரம், A.விஜி, R. ரத்தீஷ், C.சதிஷ்.
**கௌரவ செய்தி ஆசிரியர்கள்:**
S. ஆல்பர்ட் பிரான்சிஸ் சேவியர், R. சந்திரபோஸ்.
**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:** S. ரமேஷ், R. சாம் எட்வர்ட்.
**செய்தி ஆசிரியர்கள்:**
R. M. பரமகுடி ராமச்சந்திரன், புதுவை S செல்வமணி.
**கௌரவ இணை ஆசிரியர்:** A.R. பத்மநாதன், RNS. வெங்கடேஷ்வரா
**முதன்மை துணை ஆசிரியர்கள்:** M. தனராஜ், M. லோகேஷ்.
**பொறுப்பு இணை ஆசிரியர்கள்:**
D. கென்னடி, L.S. மனோகரன், S. தினேஷ்ராஜ், S. முத்து இப்ராகிம் ஷா, M. ஜெய்பிரசாத்.
**தலைமை இணை ஆசிரியர்கள்:**
G. திருச்செந்தில்வேல், T. செந்தில்குமார், ST ஜோசப், K. சதீசன்.
**தலைமை கௌரவ ஆசிரியர்கள்:**
M. கார்த்திக், A. ஷபீக் ரகுமான்.
**தொகுப்பு இணை ஆசிரியர்கள்:**
M. விஜயகுமார், S.B. ரவிக்குமார்.
**தொகுப்பு துணை ஆசிரியர்கள்:**
C. பெருமாள், J. கோவிந்தராஜ், C. அய்யாவு, R. தாகிர், K. ரவிச்சந்திரன்.
**துணை ஆசிரியர்கள்:**
D.சுரேஷ்குமார், G.சுரேஷ், A. மன்சூர், தனுஷ் பாண்டியன், J தாஹிர்.
**கௌரவ துணை ஆசிரியர்கள்:**
P. சதீஷ், G. அருள்செல்வன், D. கோபிநாத், P. உதயகுமார், A.T. அஷ்ரப், S. ரவிக்குமார்.
**உதவி ஆசிரியர் குழு:**
K. நமச்சிவாயம், S. சரவணன், M.S. ஆரோக்கியசாமி, M. விஜயேந்திரன். K. தம்புசாமி, முசா(எ)சாகுல் ஹமீது, Dr. ஸ்டேன்லி மோசஸ், Dr. L. ரமேஷ், A.S. அருண்குமார், A. முஜிபுர் ரகுமான், M. மாலா, M. ஆனந்தராஜ், AMS. ஹம்சத்அலி, R. சுப்பு, D. ராஜீவ்காந்தி, S. முரளிதரன், T. சுதாகர், S. கலாநிதி, G. கலையரசன், M. நாகராஜ், கிஷோர் குமார், ஜெயின் சன்சா, R.மலர்கொடி, RD ராம்குமார், A. ஆரோக்கியசாமி.
**நிருபர்கள்:**
M. தயாநிதி, S. சுல்தான்அலாவுதீன், M.சுரேஷ்குமார், M. செய்யது சகாபுதீன், S. சீனிவாசன், S. கிருஷ்ணன், P. வேல்முருகன், A. பார்த்திபன், S. சுரேஷ், S. சுப்ரமணி, லாசரஸ் கோவல், D. வில்வநாதன், G. ஜாபர் அலி, Dr.A. அருள்சாமி, V. முத்துகுமரேசன், S. சுந்தரமூர்த்தி, C. பிரபாசிங், M.J. சீனிவாசன், B. செல்வமணி, Dr. முஸ்தபா, S. லோகநாதன், A. முகமது தௌபிக், M. ஈஸ்வரி, V. ராஜாமுகமது, I. இப்ராஹிம், S.S. சஹாபுதீன், A. முகமது இதிரீஸ், R. ஜெயாகிருஷ்ணன், K. ரஜமோனி, A. விஜயசிங்கம், G. குமரேசன், M. அஹமத்முஸ்தபா ஆலிம், M. தமிழ்செல்வன், Y. முபாரக், ரியாஸ் அகமது, S. முகமது ஷெரீப், முஜிபூர்ரகுமான், S. சசிகுமார், R. ரவி, A. அமிர்தவேல், Y. மைதின் ஷசா, V. செல்வராஜ், S. சபாபதி, Dr. டார்வின் ஜான், ஜெயசுனிதா, R. சுதாகர், A. செல்வராஜ், C. அய்யாவு, K. சின்னராஜா, N. சுரேஷ், Y. முபாரக் அலி, S. ரியால் அகமது, M. கோவிந்தராசு, முரளி (எ) பிரேம்குமார், S. பாலமுருகன், S. தென்னரசு, Dr. ஜான் டைட்டஸ் இம்மானுவேல், R. பிரஸ்டன்ட், R. டேனியல், சத்திய நாராயணன், இர்பான், W. பீட்டர், கார்த்திகேயன், சரவணன், ஜான் மார்க், கோபாலகிருஷ்ணன், B. புஷ்பலதா, C. பெருமாள், K.A. செல்வராஜ், K. குணசேகரன், M. கலந்தர் முகைதின், S. சுந்தரமூர்த்தி, M. சுரேஷ், P. சிவகாமி, உபகாரம், ஆறுமுகம், A. பாலசுப்பரமணியன், தாமரைகனி, K. மணிகண்டன், M. பாலமுருகன், R. நாகராஜன், வேலுச்சாமி, K.S.சசிகுமார், L. ராஜகணபதி, A. ஜாபீர், M.மனோஜ், S. வெங்கடேஷ்குமார், G.ஜெயபிரகாஷ், S.ரபி, N.ஜெய்கணேஷ், M.ராஜா, M.தயாளன், K. விஜயகுமார், P. கிரேசி எலிசபத்மேரி, A.சக்திவேலு, V.சக்திவேல், D.சிவப்பிரகாசம், R.விவேக்கமல், K.ராஜா, H. ஹாஜா மைதின், R. ஜீவனந்தம், S. ஜான்சன், T. ஜெயசந்திரன், முபாரக் அலி, ராஜா முகமது, ரஸியாபேகம், சுவைஹாபேகம், M. மல்லிகா, முகமது அஜீஸ் K. ராஜ்குமார், V. தசரதன்.
**சட்ட ஆலோசகர்கள்:**
R. சிவக்குமார் BA BL (மதுரை), R. சீதா BA BL (பட்டுக்கோட்டை), C. பாலாஜி BA BL (திருச்சி), M. ஞானசேகரன் BA BL (பொன்னமராவதி), K. கேசவமூர்த்தி BA BL (தஞ்சாவூர்), R. S. ராஜேந்திரன் BA LLB (வேதாரண்யம்), C. முருகன் BA BL (நாகப்பட்டினம்), D.G. தினகரன் BA LLB (கிருஷ்ணகிரி), S. மோகன் காந்தி BA BL (ஓசூர்).
**புகைப்பட நிருபர்கள்:**
AMS. சல்மான் அஹமது, A. குர்சித் ஆலம் கான், R. ரவி, V. வித்யாவீரப்பன், M. அருண், Dr.R. செல்வராணி. K. ஷக்கீனா சொர்ணலதா, மதிவிழி.



**இந்த இதழ் குறித்த அனைத்து தொடர்புகளுக்கும் முகவரி:**
ஆசிரியர்,
**மனித உரிமைகள் மீட்பு (மாத இருமுறை இதழ்)**
எண்:2/115D1, ஆன்டாஞ்சிரா, கொன்னச்சால் Po,
எருமாடு, பந்தலூர் தாலுக்கா, நீலகிரி மாவட்டம்,
தமிழ்நாடு-643239. செல்: 9543410000
Mail: manithurimaigalmeetpu@gmail.com
http://internationalhumanrightswatch.org


"மனித உரிமைகள் மீட்பு" இப்பொழுது ஆன்லைன் செய்திகளாய் உலகமெங்கும். https://youtube.com/@manithaurimaigalmeetpu5936 என்ற Youtube மூலமாக காணலாம் மற்றும் சமூக வலைத்தளத்தில் பகிரலாம்.

எல்லா வழக்குகளும் சென்னையில் உள்ள உயர்நீதிமன்றத்தின் வரம்புக்கு மட்டுமே உட்பட்டவை. இதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு மனித உரிமைகள் மீட்பு இதழ் நிர்வாகம் பொறுப்பல்ல. பேட்டிகள் சிறப்பு கட்டுரையாளர்கள் இன் கருத்துகள் அவர்களின் சொந்த கருத்துகளே.

## முக்கிய அறிவிப்பு

**மனித உரிமைகள் மீட்பு பத்திரிக்கை சங்கங்கள் இல்லை. மனித உரிமைகள் மீட்பு என்பது இந்திய பத்திரிக்கை துறையில் RNI பதிவு பெற்ற பத்திரிகையாகும். சில நபர்கள் மனித உரிமைகள் என்ற பெயரில் அமைப்புகள் மற்றும் சங்கங்கள் போன்று செயல்பட்டால் பத்திரிக்கை நிர்வாகம் பொறுப்பேற்காது.**

இப்படிக்கு
-ஆசிரியர்



# தமிழகத்தின் வளர்ச்சி எங்களுக்கு மிகவும் முக்கியம்:

## சென்னையில் பிரதமர் மோடி உறுதி

**த**மிழகத்தின் வளர்ச்சி என்பது எங்களுக்கு மிகவும் முக்கியம் என்று தெரிவித்த பிரதமர் நரேந்திர மோடி, தமிழகத்தில் ரயில்வே திட்டங்களுக்கு ரூ.6 ஆயிரம் கோடியும், சாலை மேம்பாட்டு திட்டங்களுக்கு 6 மடங்கு அதாவது ரூ.8,200 கோடி வரையும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

சென்னை பல்லாவரம் அல்ஸ்டாம் விளையாட்டு மைதானத்தில், மத்திய அரசின் சாலை, ரயில் போக்குவரத்து துறைகள் சார்பில் பல்வேறு திட்டங்களின் தொடக்க விழா மற்றும் அடிக்கல் நாட்டு விழா நேற்று நடந்தது. இதில் பிரதமர் நரேந்திர மோடி பேசியதாவது:

தமிழகத்துக்கு வருவது எப்போதும் பெருமை தருவதாக உள்ளது. வரலாறு மற்றும் பாரம்பரியத்தின் தாய்வீடாகவும், மொழி, இலக்கியத்தின் விளைநிலமாகவும். தேசபக்தி மற்றும் தேசிய உணர்வின் மையமாகவும் தமிழகம் திகழ்கிறது. பல சுதந்திர போராட்ட வீரர்கள் தமிழகத்தை சேர்ந்தவர்கள்.

மத்திய பட்ஜெட்டில் கட்டமைப்புக்காக மட்டும் இந்த ஆண்டில்ரூ.10 லட்சம்

கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இது 2014ல் ஒதுக்கியதைவிட 5 மடங்கு அதிகமாகும். அதே போல, ரயில்வே கட்டமைப்புக்கும் இதுவரை இல்லாத சாதனை அளவு தொகை ஒதுக்கப்பட்டுள்ளது.

கடந்த 2014ம் ஆண்டுக்கு முன்பு வரை ஆண்டுக்கு 600 கி.மீ. ரயில் பாதை மின்மயமாக்கப்பட்ட நிலையில், தற்போது ஆண்டுக்கு 4,000 கி.மீ. மின்மயமாக்கப்பட்டு வருகிறது. கடந்த 2014ல் 74 விமானநிலையங்கள் இருந்த நிலையில், தற்போது இரண்டு மடங்காக அதாவது 150 விமான நிலையங்கள் உருவாகியுள்ளன. கடந்த 2014 ம் ஆண்டுக்கு முந்தைய காலத்தை ஒப்பிடும் போது, துறைமுகங்களின் மேம்பாடும் 2 மடங்காகியுள்ளது.

கடந்த 2014ல் 318 மருத்துவக் கல்லூரிகள் நாட்டில் இருந்தன. தற்போது 660 மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. கடந்த 9 ஆண்டுகளில் எய்ம்ஸ் மருத்துவமனைகள் எண்ணிக்கை 3 மடங்காகியுள்ளது.

சாலை வழித் திட்டங்களில் ஒன்றான விருதுநகர் தென்காசி, பருத்தி விவசாயிகளை இணைக்கிறது. சென்னை கோவை வந்தே பாரத்ரயில், சிறு தொழில்களை வாடிக்கையாளர்களுடன் இணைக்கிறது. சென்னை விமான நிலைய புதியமுனையம் உலகத்தை தமிழகத்துக்கு கொண்டு வருகிறது. இது இளைஞர்களுக்கு வருவாய் வாய்ப்புகளை வழங்குகிறது. முதலீடுகளையும் அதிக அளவில் கொண்டு வருகிறது.

தமிழக வளர்ச்சி என்பது எங்களுக்கு மிகவும் முக்கியம். அதற்குமிகப்பெரிய முன்னுரிமை அளிக்கிறோம். தமிழகத்தில் ரயில்வே திட்டங்களுக்கு மட்டும் ரூ.6 ஆயிரம் கோடி இந்த ஆண்டு ஒதுக்கப்பட்டுள்ளது. கடந்த 200914ம் ஆண்டுகளில் இது ஆண்டுக்கு ரூ.900 கோடிக்கும் குறைவாகவே இருந்தது.

200414ல் தமிழகத்தின் தேசிய நெடுஞ்சாலை நீளம் 800 கி.மீ.ஆக இருந்த நிலையில், 201423 ல் 2ஆயிரம் கி.மீ. சேர்க்கப்பட்டுள்ளது. கடந்த 201415ல் தேசிய நெடுஞ்சாலை மேம்பாடு, பராமரிப்பு திட்டங்களுக்காக ரூ.1,200 கோடி முதலீடு செய்யப்பட்ட நிலையில், 202223 ல்6 மடங்கு அதிகரித்து ரூ.8,200 கோடியாக உயர்ந்துள்ளது.

கடந்த 2 ஆண்டுகளில் பல முக்கிய திட்டங்களை தமிழகம் கண்டுள்ளது. பாதுகாப்பு தொழில் வழித்தட திட்டம் பாதுகாப்பை அதிகரிப்பதுடன், வேலைவாய்ப்பையும் உருவாக்கியுள்ளது. பி.எம்.மித்ரா மெகாஜவுளி பூங்கா திட்டம் தமிழக ஜவுளித் துறைக்கு மிகவும் சாதகமாக அமையும்.

கடந்த ஆண்டு, பெங்களூரு சென்னை அதிவிரைவு சாலைக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது. மாமல்லபுரம் கன்னியாகுமரி சாலை மேம்படுத்தப்பட்டு வருகிறது. இதுபோன்ற வளர்ச்சியை முன்னெடுக்கும் பல திட்டங்கள் தமிழகத்தில் நடைபெற்று வருகின்றன. இன்று மேலும் சில திட்டங்கள்தொடங்கப்பட்டும், அடிக்கல் நாட்டப்பட்டும் உள்ளன.

குறிப்பாக,சென்னை,மதுரை,கோயம்புத்தூர் ஆகிய மூன்று முக்கிய நகரங்கள் இந்த புதியதிட்டங்கள் மூலம் நேரடியாக பயன்பெறுகின்றன. சென்னை கோவை வந்தே பாரத் ரயில், தமிழக இளைஞர்களிடம் பிரபலமடைந்துள்ளது. ‘இந்தியாவில் தயாரிப்போம்’ என்ற கருத்து, வ.உ.சிதம்பரம் பிள்ளையின் பூமியில் இயல்பானதுதானே. இந்த நவீன இணைப்பு ஜவுளி, குறு, சிறு தொழில் முனையமான கோவையில் உற்பத்தி திறனை அதிகரிக்கும். சென்னையில் இருந்து 6 மணிநேரத்தில் கோவைக்கு வந்தே பாரத் ரயில் செல்லும், இதன்மூலம் ஜவுளி, தொழில் மையங்களான சேலம், ஈரோடு, திருப்பூருக்கும் பயன்தரும்.

தமிழகத்தின் கலாச்சார தலைநகராகவும், உலகின் மிக பழமையான நகரங்களில் ஒன்றாகவும்மதுரை விளங்குகிறது. தற்போதைய திட்டங்களால் மதுரை மாநகரம் பெரிதும் பயன்பெறும். தமிழகம் இன்று வளர்ச்சி இன்ஜின்களில் ஒன்றாக உள்ளது. கட்டமைப்பு, வேலைவாய்ப்பை உருவாக்கும்போது வருவாய் அதிகரித்து, தமிழகம் வளர்கிறது. தமிழகம் வளர்வதால், இந்தியாவும் வளர்கிறது. இவ்வாறு பிரதமர் பேசினார்.




# விளம்பரம் செய்தால், விளையாடினால் சிறை

## ஆன்லைன் சூதாட்ட தடைச் சட்டத்தின் முக்கிய அம்சங்கள்

தமிழகத்தில் ஆன்லைன் ரம்மி, போக்கர் போன்ற சூதாட்ட விளையாட்டுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், தடை சட்டத்தின் முக்கிய அம்சங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்வது முக்கியமாகிறது. தமிழக சட்டப்பேரவையில் மீண்டும் நிறைவேற்றப்பட்ட ஆன்லைன் சூதாட்ட தடை மசோதாவுக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி நேற்று ஒப்புதல் அளித்தார். இதனைத் தொடர்ந்து, தமிழக அரசின் ஆன்லைன் சூதாட்ட தடை சட்டம் நேற்று அரசிதழில் வெளியிடப்பட்டது. இதன் முக்கிய அம்சங்கள்:

*தமிழகத்தில் பணத்தையோ அல்லது வேறு ஏதேனும் பொருளையோ வைத்து, ஆன்லைன் மூலம் நடைபெறும் சூதாட்டங்கள் மற்றும் விளையாட்டுகளுக்கு தடை விதிக்கப்படுகிறது.*

*இதன்படி, ஆன்லைன் மூலம் நடைபெறும் ரம்மி, போக்கர் போன்ற விளையாட்டுகளுக்கு தடை விதிக்கப்படுகிறது.*

*ஆன்லைன் சூதாட்ட விளையாட்டு சேவை*

வழங்கும் நிறுவனங்கள், இனி அந்த சேவையை வழங்க தடை விதிக்கப்படுகிறது.

எந்த நிறுவனமும், எந்த வகையிலும் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டுகள் தொடர்பாக விளம்பரம் செய்ய தடை விதிக்கப்படுகிறது.

இதுபோன்ற விளையாட்டு நிறுவனங்கள் மற்றும் விளையாடுவோர் இடையே பணப் பரிவர்த்தனை மேற்கொள்ள வங்கிகள், பேமென்ட் வங்கிகளுக்குத் தடை விதிக்கப்படுகிறது.

பணத்தை வைத்து ஆன்லைன் சூதாட்டம், ஆன்லைன் விளையாட்டு ஆகியவற்றை விளையாடினால் 3 மாதங்கள் வரை சிறை அல்லது ரூ.5 ஆயிரம் வரை அபராதம் அல்லது இவை இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

அதேபோல, ஆன்லைன் சூதாட்டம் தொடர்பாக விளம்பரம் செய்தால் ஓராண்டு வரை சிறை அல்லது ரூ.5 லட்சம் வரை அபராதம் அல்லது இவை இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

இதுபோன்ற சூதாட்டங்களில் ஏற்கெனவே தண்டனை பெற்றவர்கள், அடுத்தடுத்து தண்டனை பெறும்போது ஓராண்டுக்குக் குறையாமல், 3 ஆண்டுகளுக்கு மிகாமல் சிறைத் தண்டனை அல்லது ரூ.5 லட்சம் முதல் ரூ.10 லட்சம் வரை அபராதம் அல்லது இவை இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

ஆன்லைன் விளையாட்டுகளை ஒழுங்குபடுத்த தனி ஆணையத்தை அமைக்க வேண்டும். அந்த ஆணையத்தின் தலைவராக, அரசு தலைமைச் செயலருக்கு குறையாத பதவி வகித்து, ஓய்வுபெற்ற அதிகாரியை நியமிக்க வேண்டும். மேலும், காவல் துறை ஐ.ஜி., தகவல் தொழில்நுட்ப வல்லுநர், மனநல ஆலோசகர், ஆன்லைன் விளையாட்டில் அனுபவம் வாய்ந்த ஒருவர் ஆகியோரை உறுப்பினராக நியமிக்க வேண்டும்.

முன்னதாக, தமிழகத்தில் ஆன்லைன் சூதாட்ட விளையாட்டில் பணத்தை இழந்து பலர் தற்கொலை செய்து கொண்டதைத் தடுக்க கடந்தாண்டு அக்டோபர் மாதம், அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட்டது. இந்த சட்டத்துக்கு ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தார். அதைத்தொடர்ந்து, அக்.19ம் தேதி சட்டப்பேரவை கூட்டத்தில், இதற்கான சட்ட மசோதா நிறைவேற்றப்பட்டு ஆளுநர் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. மசோதாவில் சில விளக்கங்களை ஆளுநர் கேட்டார். அதற்கு உடனடியாக பதில் அளிக்கப்பட்டது. பின்னர், 4 மாதங்கள் கழித்து, அந்த சட்ட மசோதாவை, தமிழக அரசுக்கு சட்டமியற்ற அதிகாரமில்லை என்று கூறி ஆளுநர் திருப்பியனுப்பினார்.






இதையடுத்து, ஆன்லைன் சூதாட்ட தடை மசோதா சட்டப்பேரவையின் நடப்புக் கூட்டத் தொடரில் மீண்டும் நிறைவேற்றப்பட்டது. உடனடியாக மசோதா, தமிழக சட்டத்துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு, அனைத்து விவரங்களும் சரிபார்க்கப்பட்டன. அந்த மசோதா மற்றும் ஆளுநர் கோரிய விளக்கங்கள் என அனைத்தும் தமிழக சட்டத் துறையின் மூலம் ஆளுநருக்கு ஒப்புதலுக்காக அனுப்பி வைக்கப்பட்ட நிலையில், அந்த மசோதாவுக்கு நேற்று ஆளுநர் ஆர்.என்.ரவி ஒப்புதல் அளித்தது குறிப்பிடத்தக்கது.

# என் தட்டும் வயிறும் சோறில்லாமல்!



தொலைந்து போனேன்
தேடித் தொலைந்து போனேன்
எதிர்பார்த்து ஏமாந்து போனேன்
நேசித்து நொடிந்து போனேன்
என்னடா வாழ்க்கை என்றேன்
இனி எப்போதும் இறக்க துணிந்தேன்

போதி மரம் தேவையில்லை
நான் புத்தனாக போவதுமில்லை

துறப்பதற்கு ஒன்றும் இல்லை

துறவுகொள்ள போவதில் அர்த்தமில்லை

சிறுபிள்ளையாய் அழுது பார்த்தேன்
கேட்டது எதையும் தரவில்லை

அன்பாய் அழைத்து பார்த்தேன்
அவள் என்றும் வரவேயில்லை

கடன் வாங்கி காணிக்கைப் போட்டேன்
கண் திறந்து பார்க்கவே இல்லை

கண்ணீர் சிந்தி கல்லும் கரைந்திட
கல்லுக்குள் ஒளிந்திருக்கும் கடவுள்
கருணையின்றி இறுக்கிறார்

நான் முகம் கழுவுகையில் ஓடிய
தண்ணீரை பார்த்து திடுக்கிடுவிட்டேன் நான்.
ஒவ்வொரு நாளும் இவ்வளவு அழகையா
வேண்டாம் என்று
நான் நீரில் விடுகிறேன்

பிறகு...........
குருதிக்குடுவை நிறைய
பெருங்குணம் சுமந்தபடி
சமூகம் நோக்கினேன்,
தட்டிவிட்டபடி கையில்

சாக்குப்பை திணித்து
பணம் பொறுக்கும்படி
பரிவின்றி பணிக்கப்பட்டேன் !

உயர்கல்வி உடுத்தி
தெரு கடக்கும்போது
அழுத்தமாய் சிரித்தது
அழுக்குச் சமூகம் நீ
யாரென்பதை நின் முகம்
தவிர்த்து பண முகாமே
தீர்மானிக்கும் என்றபடி !

என் திறமைகளை
அளவீடு செய்ய மறுக்கும்
செவிட்டு உலகம்
செருப்பை உற்றுநோக்கி
என்னை கணிக்கிறது !

ஏறிஇறங்கிய உடுப்பற்ற
நான் ஏறஇறங்கவே
பார்க்கப் படுகிறேன் என்
அழுக்கற்ற அகம் பொசுங்க
பொய்த்தூய்மை தேடப்படுகிறது !

உண்மையை மடித்து
முதுகுக்குப்பின் ஒழித்து
போலிப் புன்னையோடு
காசோடு காதல்புரி உன்
நேர்மைக்கு தீயிட்டுவிட்டு !

பணக்கார காதல்களுக்கு
வாயிற்சீட்டும் ஏழைக்
காதல்களுக்கு வாய்ப்பூட்டும்
பட்டுவாடா செய்யப்படுகிறது
மேலும்சில காரணிகளோடு !

எங்கு திரும்பினும்
முகமதிப்பை மிதித்தபடி
பணமதிப்பை கேட்கும்
சமூகம் எனைத்தள்ளிய

இடம்தோறும் எனைப்போன்றே
பணப் பொறுக்குப் போருக்கு
பழக்கபடாத முகங்கள் !

ஓர் நாள் விடியும்
என்ற நம்பிக்கையை
நெஞ்சிலும் வறுமையை
முதுகில் சுமந்தபடி
வானவில் ரசிப்பதெப்படி...?
நிறைய அழு கண்ணீர்
கல்லறை கூட
சில்லறை இருந்தால்
வாய் திறந்தே மொழி பேசும்

இல்லாதவன் சொல்
சபையேறாமல்
ஏளனமாகப் பேசும்.."

தெய்வமே,
உன்னை என் இதயத்திலிருந்து
வெளியேற்றிவிட்டு,
ஒரு பெண்ணைக்
குடிவைத்ததற்காகக்
கோபித்துக்கொண்டு
என்னைக் கைவிட்டு விடாதே!

சுத்தம் சோறு போடும்
என்கிறீர்கள் !

இன்றுவரை
சுத்தமாகத்தான் இருக்கிறது

ஆனால்.....

என் தட்டும் வயிறும்
சோறில்லாமல் !

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000



# லஞ்ச ஒழிப்பு துறையால் பரிசுத்தமாக்கப்பட்ட குற்றவாளிகள்!

**ல**ஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கையால் தண்டிக்கப்பட்டவருக்கும், போலி சோதனை நடத்தியவருக்கும் லஞ்ச ஒழிப்புத் துறையால் நற்சான்றுடன் பணி.

அதிர்ச்சி தகவல்கள்

கன்னியாகுமரி மாவட்டத்தில் குமரி லஞ்ச ஒழிப்பு துறையால் குற்ற எண் 8/2008 என்று வழக்கு பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைக்கு உள்ளானவரை குமரி லஞ்ச ஒழிப்புத் துறையில் ஆய்வாளராக்கி பரிசுத்தமாக்கப்பட்டுள்ளார்.

இதன் மூலம் அவர் தவறு செய்ததாக பதியப் பட்ட முதல் தகவல் அறிக்கை மற்றும் ஆறு மாத சஸ்பெண்ட் ஆகியவை கால சக்கரத்தில் சிக்கி அழிந்து போனதாக கூறப்படுகிறது. இதே போல குமரி மாவட்டத்தில் துணை காவல் கண்காணிப்பாளராக பணிபுரிந்த மதியழகன் என்பவர் மார்த்தாண்டம் வட்டார

போக்குவரத்து அலுவலகத்தில் போலியாக சோதனை நடத்தி லஞ்ச ஒழிப்புத்துறை உயர் அதிகாரிகளிடம் பெயர் வாங்க முயற்சித்த சம்பவத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் பொருத்தப்பட்டு இருந்த சிசிடிவி பதிவுகள் மூலம் அவருடைய வண்டவாளம் வெளிச்சத்திற்கு வந்தது.

மேலும் ஒப்பந்ததாரர் ஒருவர் முதலமைச்சரின் மரம் நடும் திட்டத்தில் ஊழல் செய்ததாக வழக்கு பதிவு செய்யப்பட்டது. அதில் வனத்துறையினரும் அந்த வழக்கில் குற்றவாளிகளாக சேர்க்கப்பட்டனர். அதில் முக்கியமான குற்றவாளியாக சேர்க்கப்பட்ட ஒப்பந்ததாரரை அரசு தரப்பு சாட்சியாக மாற்றி பிரதிபலன் பெற்று அவரை காப்பாற்றியதாகவும் நீதிமன்றத்தில் அவரை அரசு தரப்பு சாட்சியாக சாட்சி கூற வைத்த தகவலும் வெளியானது.

இவ்வாறு அந்த டி எஸ் பி யின் வண்டவாளம் எல்லாம் தண்டவாளத்தில் ஏறிய நிலையில் அவர் குமரி மாவட்டத்தில் இருந்து திருவண்ணாமலைக்கு மாற்றப்பட்டார். ஆனால் அவரை உடனே பரிசுத்தப்படுத்தி தென்காசி மாவட்டத்திற்கு லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பியாக நியமித்து திருநெல்வேலி மாவட்டத்திலேயே குறிப்பாக திருநெல்வேலி லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திலேயே தற்போது இருக்க வைக்கப்பட்டுள்ளார். சமீபத்தில் கூடுதல் காவல் கண்காணிப்பாளராகவும் பதவி உயர்வு பட்டியலில் இடம்பெற வைக்கப்பட்டு உள்ளதாக தெரிகிறது.

இவ்வாறு குற்றவாளிகளாக இருந்தவர்கள் தற்போது பரிசுத்தப்படுத்தப்பட்டவர்களாக மாற்றப்பட்டு அதே லஞ்ச ஒழிப்புத்துறையில் முக்கிய இடங்களிலேயே பணியமர்த்தப்பட்டு உள்ளது லஞ்ச ஒழிப்புத்துறை எந்த அளவிற்கு "சிறந்து விளங்குகிறது" என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு என்றே பெருமை கொள்ளும் விதத்தில் நம்மையெல்லாம் புல்லரிக்க செய்யும் விதத்தில் உள்ளது என்றால் மிகையல்ல.

லஞ்ச ஒழிப்புத்துறை தலைமையகத்தில் மிகச்சிறந்த உயர் அதிகாரிகளாக இயக்குனர் கந்தசாமி மற்றும் துணை இயக்குனர் லட்சுமி ஐபிஎஸ் ஆகியோர் இருக்கும் நிலையில் லஞ்ச ஒழிப்புத்துறையால் வழக்கு பதிவு செய்யப்பட்டவர் அந்த வழக்கில் குற்றவாளி என்ற நிலையிலும் மற்றொரு டிஎஸ்பி மதியழகன் லஞ்ச ஒழிப்புத்துறையால் பதிவு செய்யப்பட்ட வழக்கில் முக்கிய குற்றவாளியாக இருந்தவரை அரசு தரப்பு சாட்சியாக மாற்றி அந்த ஒப்பந்ததாரரை காப்பாற்ற வழக்கை குழி தோண்டி புதைத்த நிலையிலும் மற்றும் போலியாக வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தில் சோதனை நடத்தி சிசிடிவி மூலம் அவரது போலி சோதனை வெளியாகி லஞ்ச ஒழிப்பு துறைக்கு களங்கத்தை ஏற்படுத்திய நிலையில் திருவண்ணாமலை மாவட்டத்திற்கு பணியிட மாற்றம் செய்யப்பட்ட நிலையில் குறுகிய நாட்களில் தனது சொந்த மாவட்டமான திருநெல்வேலிக்கு அருகே தென்காசி மாவட்டத்திற்கு லஞ்ச ஒழிப்புத்துறை டிஎஸ்பி ஆகி திருநெல்வேலி லஞ்ச ஒழிப்புத்துறை அலுவலகத்திலேயே உட்கார்ந்து பணி செய்ய பரிசுத்தமாக்கப்பட்டவர்கள் தான் லஞ்ச ஒழிப்புத் துறையில் பணியாற்றி வருகின்றனர் என்பது பெரும் அதிர்ச்சியாக உள்ளது.

**லஞ்ச ஒழிப்புத் துறையின் களங்கத்தை துடைக்க உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே குற்றவாளிகளின் புகலிடமாக லஞ்ச ஒழிப்புத்துறை மாறுவதை தடுக்க முடியும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது**

லஞ்ச ஒழிப்புத் துறையின் களங்கத்தை துடைக்க உயர் அதிகாரிகள் நடவடிக்கை எடுத்தால் மட்டுமே குற்றவாளிகளின் புகலிடமாக லஞ்ச ஒழிப்புத்துறை மாறுவதை தடுக்க முடியும் என்பதே அனைவரின் எதிர்பார்ப்பாக உள்ளது

- தலைமை செய்தி ஆசிரியர் C.J. சுதர்மன்




# ரூ.284.32 கோடியில் கட்டப்பட்ட 2,828 குடியிருப்புகள்:

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்துவைத்தார்

**நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் ரூ.284.32 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 2,828 குடியிருப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.**

இதுகுறித்து அரசு நேற்று வெளியிட்ட செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் அனைவருக்கும் வீட்டு வசதி திட்டத்தின்கீழ், சென்னைஎன்.வி.என். நகர் திட்டப்பகுதியில் பழுதடைந்த பழைய குடியிருப்புகள் இடிக்கப்பட்டு, மறுகட்டுமான திட்டத்தின் கீழ் தூண் மற்றும் 14 அடுக்குகளுடன் ரூ.104.10 கோடி செலவில் 840 புதிய குடியிருப்புகள் கட்டப்பட்டுள்ளன. அதேபோல, தேனி அப்பியபட்டியில் 432 அடுக்குமாடி குடியிருப்புகள், போடிநாயக்கனூரில் 168, திருச்சி மாவட்டம் இருங்களூரில் 240, தஞ்சாவூர் மாவட்டம் கூடநாணல் பகுதியில் 240, ஈரோடு மாவட்டம் அரக்கன்கோட்டையில் 180, உக்கடம் பகுதியில் 224, வேலூர் மாவட்டம் தொரப்பாடியில் 160, ராமநாதபுரம் மாவட்டம் பட்டிணம்காத்தான் பகுதியில் 264 குடியிருப்புகள் மற்றும் கோவை மாவட்டம் பச்சினம்பதியில் தனி வீடுகளாக

80 குடியிருப்புகள் என மொத்தம் ரூ.284.32 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள 2,828 குடியிருப்புகளை முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னை தலைமைச் செயலகத்தில் இருந்து காணொலி வாயிலாக திறந்து வைத்தார்.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 330 பயனாளிகளுக்கு குடியிருப்புகளுக்கான ஒதுக்கீடு ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 2 பயனாளிகளுக்கும், பயனாளிகள் தாமாக வீடு கட்டும் திட்டத்தின்கீழ் பல்வேறு மாவட்டங்களில் வசிக்கும் 5,430 பயனாளிகளுக்கு தனி வீடுகள் கட்ட தலாரூ.2.10 லட்சம் வீதம் ரூ.114கோடியே 3 லட்சம் மதிப்பீட்டிலான பணி ஆணைகளை வழங்கிடும்அடையாளமாக 2 பயனாளிகளுக்கும் முதல்வர் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன், தலைமைச் செயலர் வெ.இறையன்பு, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலர் அபூர்வா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண் இயக்குநர் ம.கோவிந்த ராவ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

வீட்டு வசதி வாரியம்: தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ரூ.171.36 கோடி மதிப்பில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடங்களையும் முதல்வர் திறந்து வைத்தார். மேலும், நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் சார்பில், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர் மாவட்டங்களில் ரூ.10.88 கோடியில் கட்டப்பட்ட அலுவலக கட்டிடங்கள், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் சார்பில் ரூ.1.35 கோடியில் புதுப்பிக்கப்பட்ட கட்டிடங்களையும் திறந்து வைத்தார்.

நகர் ஊரமைப்புத் துறையில் அளவர், உதவி வரைவாளர் பணியிடங்களுக்கு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்ட 48 பேருக்கு பணிநியமன ஆணைகளையும் முதல்வர்வழங்கினார். சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் சார்பில், வண்டலூர் கிளாம்பாக்கம் புதிய புறநகர்பேருந்து நிலையம் அருகில் தொல்பொருள் விளக்க மையம் மற்றும் கால









நிலை பூங்கா 16.90 ஏக்கரில் ரூ.14.98 கோடியில் அமைக்கப்பட உள்ளது. சாத்தாங்காட்டில் இரும்பு மற்றும் எஃகு வணிக அங்காடியில் 4 ஏக்கரில் கனரக வாகனநிறுத்துமிடத்தில் ரூ.5 கோடியில்கான்கிரீட் சாலை அமைக்கப்படுகிறது. இந்தப் பணிகளுக்கு முதல்வர் ஸ்டாலின் அடிக்கல் நாட்டினார்.

இந்நிகழ்ச்சிகளில் அமைச்சர்கள் சு.முத்துசாமி, மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, வீட்டுவசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன், வாரியமேலாண் இயக்குநர் சரவண வேல்ராஜ், நகர ஊரமைப்பு இயக்கக இயக்குநர் பா.கணேசன், கூட்டுறவுசங்கங்களின் பதிவாளர் அ.த.பாஸ்கரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.



# ‘காவல் உதவி செயலி’ மூலம் சைபர் குற்ற புகார்களையும் பதிவு செய்யலாம்

## தலைமை காவல் கட்டுப்பாட்டு அறை எஸ்.பி. தகவல்...

**சைபர் குற்ற புகார்களையும் காவல் உதவி செயலி மூலம் பதிவு செய்யலாம் என மாநில காவல் தலைமை கட்டுப்பாட்டு அறை கண்காணிப்பாளர் தீபா சத்யன் தெரிவித்தார்.**

பெண்கள் உள்பட அனைத்து தரப்பு மக்களும் அவசர காலங் களில் காவல் துறையின் உதவியை உடனடியாக பெறும் வகையில், 66 சிறப்பம்சங்களுடன் ‘காவல் உதவி’ செயலி உருவாக்கப்பட்டது. இதை கடந்த ஆண்டு ஏப்.4ம் தேதி முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கிவைத்தார்.

இது தொடங்கப்பட்டு ஓராண்டு நிறைவடைந்துள்ளது. இந்த காவல் உதவி செயலியை தமிழகம் முழுவதும் இதுவரை 2 லட்சத்து 79 ஆயிரத்து 656 பேர் தங்களது செல்போனில் பதிவிறக்கம் செய்துள்ளனர்.

இதில், சென்னையில் 46,174 பேர் பதிவிறக்கம் செய்துள்ளனர். இந்த செயலி 14 தலைப்புகளின்கீழ் 66 அம்சங்களை கொண்டிருக்கிறது. இது அவசரகால செயலியாகவும், பிற தேவைகளுக்காகவும் வடி வமைக்கப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டுக்காக கொண்டு வரப்பட்டுள்ளது.

100, 112 மற்றும் 101 போன்ற அனைத்து கட்டணமில்லா எண்களும் இந்த காவல் உதவி செயலி மூலம் பெறலாம். சைபர் குற்ற புகார்களையும் காவல் உதவி செயலி மூலம் பதிவு செய்யலாம். 37 மாவட்டங்கள், 9 காவல் ஆணையர் அலுவலகங்கள் கூகுள் மேப்பில் இணைக்கப்பட் டுள்ளன.

தமிழக மக்கள் தொகையில் வெறும் 0.36 சதவீதம் பேர் மட்டுமேஇதை பதிவிறக்கம் செய்துள்ள னர். எனவே, இந்த செயலியின் முக்கியத்துவம் குறித்து தொடர்ந்துவிழிப்புணர்வு ஏற்படுத்த உள்ளோம். குறிப்பாக, கல்வி நிலையங்களில் பிரச்சாரம் மேற்கொள்ள உள்ளோம். காவல் உதவி செயலியை பொதுமக்கள் அனைவரும் பதிவிறக்கம் செய்து இதன் முழு பலன்களையும் பெற் றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு தீபா சத்யன் கூறினார்.

Owned and Published by M.ABDUL RAHMAN from No.61, Venkata Mesthiri Street, Mannadi, Chennai-600 001 and Printed S.ALI MOHAMED SAYEED by J.M.PROCESS, at 22/49, Subedar Hussain Street, Border Thottam, Royapettah, Chennai-600 014. Editor: K.MADHUSUDHANAN


UMMANI
TEA DUST
SELECTED QUALITY
HYGIENIC PACKING
UMMANI
TEA DUST
CTC TEA DUST
100g
50g - ₹.22
100g - ₹.36
250g - ₹.70
500g - ₹.140
1kg - ₹.280
தமிழகம் முழுவதும்
மாவட்ட வாரியாக
முன் பணம் இல்லாமல்
டீலர்கள் தேவை!
தங்கள் தொடர்புக்கு:
9952119066

MANITHA URIMAIGAL MEETPU Tamil Fortnightly, November 1-15-2018
Regd. with the Registrar of News Papers for India under No. TNTAM / 2017 / 74330 / R.Dis.481 / 17



# என்னை முளைக்க விடுங்கள்!

நான் முளைத்து இருக்கிறேன்.
என்னை வெட்டி விடாதீர்கள்!

நான் இப்போது மலர்ந்து இருக்கிறேன்
பூவிலேயே பறித்து விடாதீர்கள்
நான் காய்க்க வேண்டியிருப்பதால்,

என்னை காயிலேயே பறித்து விடாதீர்கள்
நான் கனிய வேண்டி இருப்பதால்
கனியை பறித்து திண்ணுங்கள் ஆனால்
விதையை தின்று விடாதீர்கள்!

நான் மீண்டும் முளைக்க வேண்டியிருப்பதால்
என்ற வேண்டுதலுடன் துவக்கும்...

- M. அப்துல்ரகுமான் (வழக்கறிஞர்)
நிறுவனர்
மக்கள் ஊழல் தடுப்பு இயக்கம்
மனித உரிமைகள் மீட்பு
95434 10000